__உடன் நடவடிக்கைக்கு.__

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 178

எனது இல. 2/9/771(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1980, செத்தெம்பர் மாதம் 09ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள் யாவர்க்கும்,

**நிவாரணம் கோரி மேதகு ஜனாதிபதி அவர்களுக்குக்**
**__குடும்பங்கள் செய்த மேன்முறையீடு.__**

மேற்படி விடயம் பற்றிய 1980, ஓகஸ்து மாதம் 19ஆந் தேதியிட்ட 176ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் கடைசிப் பந்தியைப் பார்க்க, மேல் அறிவுறுத்துரைகள் வழங்கப்படுவதைக் காத்து நீங்கள் இப்படிவங்களை வைத்திருக்க வேண்டுமென அதிற் கோரப்பட்டிருந்தது.

02. பல்வேறு திணைக்களங்களிலிருந்தும், அரசாங்க யாக்கங்களிலிருந்தும் இப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின்/பணியாளர்களின் புள்ளிவிபரத்தை எனக்கும், அதன் பிரதியை அமைச்சரவைச் செயலாளருக்கும் __உடனடியாக__ அனுப்பி வைக்குக.

ஒப்பமிட்டவர்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ஒப்பமிட்டவர்: பி.ஐ. குணதுங்க,
இணைச் செயலாளர்.